**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Calendar Case No: | | CC. 432/2025 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | | அ.சா.6 |
| Name | : | திருமதி. உண்ணாமலை (தலைமை காவலர்) |
| Father's/Husband Name: | | திரு. அரிவானந்தன் |
| Village | : | குன்னம் காவல் நிலையம் |
| Taluk | : | குன்னம் |
| Age | : | 50/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 01.04.2026

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ் உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரிகள் 1 முதல் 6, 10, 11 ஆஜர்).**

**முதல் விசாரணை**

i) நான் தற்போது குன்னம் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கின் புலன் விசாரணை அதிகாரி காவல் உதவி ஆய்வாளர் பார்த்திபன் ஆவார். நான் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 03.11.2021ம் தேதி புகார்தாரர் கனம் நீதிமன்றத்தில் பிரிவு 156(3) கு.வி.மு.சன் கீழ் தனி புகார் தாக்கல் செய்து அதன் அடிப்படையில் கனம் நீதிமன்றம் உத்தரவின் பேரில் குன்னம் காவல் நிலைய குற்ற எண் 801/2021, சட்டப் பிரிவுகள் 147, 148, 294(b), 307, 324, 354, 365, 448, 506(2), 34 of IPC & Sec 4 of TNPHW Actன் படி காவல் உதவி ஆய்வாளர் எதிரிகள் மீது வழக்கு பதிவு செய்துள்ளார். **தனிப்புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ4 மற்றும் அ.சா.ஆ5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

வழக்கு கோப்பினை புலன்விசாரணைக்கு எடுத்துக் கொண்ட காவல் ஆய்வாளர் வழக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் ராஜாராம், காமராஜ் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடம் குறித்து பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். அவை

**முறையே பார்வை மகஜர் அ.சா.ஆ6 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ7 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**.

பின்னர் சாட்சிகள் திவ்யா, சின்னதுரை, தினேஷ், சுப்ரமணி, சுசிலா, கொளஞ்சி, ராஜாராம், காமராஜ் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். இவ்வழக்கின் எதிரிகள் சத்தியமூர்த்தி, தனபால், மோகன்தாஸ், ராமக்கண்ணு ஆகியோர் தலைமறைவு குற்றவாளிகளாக இறுதியறிக்கையில் காட்டப்பட்டுள்ளது. மற்ற எதிரிகளான பழனிவேல், கலைச்செல்வன், செல்லம்மாள், ராஜா, குமார் ஆகியோர்களில் பழனிவேல் மற்றும் குமார் கைது செய்யப்பட்டு அடைப்பு காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார் மற்ற எதிரிகள் முன்பிணை பெற்றுள்ளதால் அவர்களை கைது செய்யவில்லை. ஆய்வாளரின் விசாரணைகளிலிருந்தும் சாட்சிகளின் வாக்குமூலத்திலிருந்தும் வாதி திவ்யாவை கம்பத்தில் கட்டி வைத்து அவரது கைகளை கயிற்றினால் கட்டி, அசிங்கமாக திட்டி அடித்து மிரட்டியதாக தெரியவந்ததால் இந்த வழக்கின் சட்டப்பிரிவை 147, 148, 294(b), 307, 324, 354, 365, 448, 506(2), 34 of IPC & Sec 4 of TNPHW Act ன் கீழிருந்து 147, 148, 342, 294(b), 323, 506(2) of IPC & Sec 4 of TNPHW Actன் கீழ் சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தாக்கல் செய்துள்ளார். **சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இறுதியாக புலன் விசாரணை முடித்து எதிரிகளின் மீது சட்டப் பிரிவுகள் 147, 148, 342, 294(b), 323, 506(2) of IPC & Sec 4 of TNPHW Actன்படி இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த வழக்கில் எந்த சாட்சிகளையும் நான் நேரடியாக விசாரிக்கவில்லை என்றாலும் ஆவணங்களின் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை இல்லை**

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.